# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பொல்கஹாவலே பௌத்த இளைஞர் கழக (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*[1984, ஜூன் மாதம் 07 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1984, ஜூன் மாதம் 08 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: சதம் 60 — தபாற் செலவு: சதம் 60

1984 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பொல்கஹாவலே பௌத்த இளைஞர் கழக (கூட்டிணைத்தல்) சட்டம்

[1984, ஜூன் மாதம் 07 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 56/83

**பொல்கஹாவலே பௌத்த இளைஞர் கழகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்.**

"பொல்கஹாவலே பௌத்த இளைஞர் கழகம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட கழகத்தோடு சம்பந் தப்பட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத் தும் நோக்கத்திற்கென பொல்கஹாவலேயில் இதற்கு முன்னர் தாபிக்கப் பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

அத்துடன், சொல்லப்பட்ட கழகமானது எந்தப் பல்வேறு குறிக்கோள் களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறை வேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக் கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித் தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1984 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பொல்கஹா வலே பௌத்த இளைஞர் கழக (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், (இத னத்துப்பின்னர் " கழகம் " எனக் குறிப்பீடு செய்யப்படும்) பொல்கஹா வலே பௌத்த இளைஞர் கழகத்தின் தற்போது உறுப்பினராகவுள்ள அல் லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக இதன் மேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் " கூட்டுத்தாபனம் " எனக் குறிப்பீடுசெய்யப்படும்) " பொல்கஹாவலே பௌத்த இளைஞர் கழகம் " என்னும் மகுடத்தின் கீழும் பெயரின் கீழும் இடையறுவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும் ; அத்துடன் அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுத்தல் வேண்டுமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுதலும் வேண்டும் ; அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்ப தோடு அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச் சினை ஒன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும். பொல்கஹாவலே பௌத்த இளைஞர் கழகத்தைக் கூட்டிணைத்தல்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படு கின்றது :— கூட்டுத் தாபனத்தின் பொதுக் குறிக் கோள்கள்.

(அ) இடப்பரப்பிலுள்ள இளைஞரிடையே பௌத்த முறையிலான சிந்தனையை வளர்த்தல் ;

ஏ 71361—2,675 (07/83)

(ஆ) பௌத்த தர்மத்தை செயல்முறையில் கடைப்பிடித்தொழுகுதலை ஊக்குவித்தல் ;

(இ) பௌத்த இளைஞரிடையே ஒற்றுமையையும், ஒத்துழைப்பையும் மேம்படுத்தல் ;

(ஈ) பௌத்த இளைஞரின் ஆத்மீக, பண்பாட்டு, உடல்சார், சமூக, வேறு நலத்தை முன்னேற்றுதல் ;

(உ) பௌத்த மத அக்கறைகளை மேம்படுத்தல் ; அத்துடன்

(ஊ) பௌத்த மக்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்.

கூட்டுத் தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவையாகவுள்ள அல்லது விரும்பத்தக்கவாறுள்ள எத்தன்மையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும்; இத்தத்துவத்துள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பனவற்றுக்கும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பில்லாமல் பணம் கடன் பெறுதற்கும் அல்லது திரட்டுதற்கும், மானியக்கொடைகளையும், நன்கொடைகளையும் பெறுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணியினரை வேலையில் ஈடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்கல் என்பனவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

கூட்டுத் தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய பதவி நிலைகளையும் அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகவும் அவற்றிற்கிணங்கவும் தேர்ந்தெடுக்கப்படும் அத்தகைய எண்ணிக்கையினரான வேறு ஆட்களையும் கொண்டமைந்த நிறைவேற்றுக் குழுவொன்றினால் நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக் குழு, இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் பதவிவகிக்கும் கழகத்தின் நிறைவேற்றுக் குழுவாதல் வேண்டும்.

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.

6. (1) கூட்டுத்தாபனத்தின் எல்லா அசைவற்ற ஆதனங்களினதும் கட்டுக்காப்பு, கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் காப்பாளர், தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரைக் கொண்டுள்ள நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையொன்றிற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை, இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் பதவிவகிக்கும் கழகத்தின் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையாதல் வேண்டும்.

(3) நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், சபையின் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று இருக்கின்றமை காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாதலாகாது.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

7. (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்திலும் சமுகமளித்து வாக்களிக்கும் கூட்டுத்தாபன உறுப்பினரின் மூன்றிலிரண்டுக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டும், கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்காகவும், அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும் கூட்டுத்தாபனம், காலத்துக்குக்காலம், இச்சட்டத்தின் நெறிகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் அதற்குச் சட்டமுறையானதாகும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும், அதேபோன்ற கூட்டமொன்றில் அதேமுறையில் அவை மாற்றப்படலாம், அவற்றிற்குச் சேர்க்கப்படலாம், அவை திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

கழகத்திடமிருந்து செல்மதியாக உள்ளனவும் அதற்குச் செலுத்தப்படவுள்ளனவுமான கடன்கள்.

8. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் கழகத்துக்குள்ள எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், கழகத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருக்கலாம்.

9. ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, மரணசாதனக் கையளிப்பு மூலமாகவோ அல்லது வேறுவகையாகவோ அதற்குரித்தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் பெறவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலுடையதாதலும் இயலுமானதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைகொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையாள உள்ள முழுத்தத்துவத்துடனும் வைத்திருக்கப்படலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

10. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டுமென்பதுடன், சபையின் இரண்டு உறுப்பினர்கள் முன்னிலையிலல்லாது எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படலுமாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களைக் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்விதம் கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சிக்காரராகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.

11. இச்சட்டத்திலடங்கியுள்ளது எதுவும், குடியரசினது உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட நிறுவனத்து உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்களிலிருந்து, அவர்கள்மூலம் அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த ஏனையோரின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150; (வெளிநாடு) ரூபா 200; முற்பணமாக ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் 15 ஆந் திகதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணத்தை அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.